## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## எத்தனை எத்தனை குருமார்கள்?

---

ஒரு ஊருக்கு ஒரு பெரிய மஹான் விஜயம் செய்தார். கோயில் இருந்து மக்களுக்கு தினமும் ப்ரவச்சணங்கள் செய்தார். இதைக் கண்டு ஆத்திரப்பட்ட நாஸ்திகர் இளைஞர்கள் சிலர் அவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எழுதினர், பேசினர், ஏன் அவருக்கு எதிரிலேயே அவர்கள் கேலியும் செய்தனர்.மஹானோ வெகு அமைதியாக இருந்தார்.

அன்று காலை சில மக்கள் அவரிடம் வந்து, ”ஸ்வாமி! எப்படி உங்களால் இத்தனை சீண்டல்களையும் பொறுத்துக் கொள்ள முடிகிறது? எங்களால் குழந்தைகள் சில சமயம் சத்தம் போடுவதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடிவதில்லையே! உங்களைப் போன்ற ஞானிகள், சமூக சேவையாளர்கள், நல்ல தலைவர்கள் எப்படி இப்பக்குவத்தைப் பெறுகிறீர்கள்?” என்று கேட்டனர்.

மஹான்,”மக்களே! நாம் எல்லோரும் ஒரே மனித வர்க்கம் தானே? மனிதன் மஹான் ஆவதும், தாழ்ந்த புத்தி கொண்டவனாக மாறுவதும் அவன் அவன் விருப்பமே! ஆனால் இதை யாரும் பாடம் சொல்லிக் கற்றுத் தருவதில்லை. இயற்கையில் உள்ள ஒவ்வொரு பொருளுமே மனிதனுக்கு ஏதோ ஒரு வகையில் ஞானத்தைக் கூறும் சத்குருவாகத் தான் விளங்குகிறது. ஏன் என்றால் அவை அனைத்துமே ப்ரஹ்ம மயம் தானே?”

”அப்படி என்றால் நீங்கள் இயற்கையில் இருந்து என்ன என்ன கற்றுக் கொண்டீர்கள்?” என்று ஒரு அன்பர் கேட்டார். அதையே அன்றைய ப்ரவச்சணமாக வைத்துக் கொள்ளலாம் என்று முடிவும் செய்யப்பட்டது. மாலைக் கூட்டத்தில் மஹான் தன் சொற்பொழிவை ஆரம்பித்தார், ஒலிபெருக்கி [mike] மூலம் ஊர் முழுதும் அவர் குரல் கேட்டது.

அடியேனுக்கு உலகில் பல குருமார்கள். அதில் முதல் குரு குழந்தை.குழந்தை கள்ளம் கபடம் இல்லாதது. குறிப்பாக யார் என்ன தீயது செய்தாலும் அதை மறந்து அவர்களுடன் அது விரைவில் மீண்டும் நட்புக் கொண்டு விடும். இந்த மன்னிக்கும் குணம் மிக மிக மனிதனுக்கு முக்கியம்.

அடுத்து இந்த பூமி. பொறுமையின் சிகரமே பூமி தானே. வள்ளுவர் சொன்னது போல யார் என்ன செய்தாலும் முதலில் சகித்துக் கொள்ள வேண்டும். உரிய காலத்தில் அவர் செய்த தீமையைத் தட்டிக் கேட்க வேண்டும், உணர்த்த

வேண்டும். பூமியும் அதைத் தான் சுனாமி, மழைவெள்ளம், மண் சரிவு, நில அதிர்ச்சி எனத் தந்து உணர்த்துகிறது.

அடுத்து ஆகாசம். அது யாருக்காவது இடம் தரமாட்டேன் என்கிறதா? அதைப் போல மனிதன் தன் மனதில் அனைனருக்கும் அன்பால் இடம் தர வேண்டும். தீய புத்தி உள்ளவர்களை மெதுவாகவே மாற்ற முடியும். அதனால் தான் பஞ்சபூதங்களில் ஆகாசம் மெய்யுணர்வைக் குறிக்கின்றது. அதுவே சிதம்பர ஷேத்ரம் ஆகும்.புரிகிறதா?

அடுத்த என் குரு காற்று. காற்று ஒழுங்காகத் தன் கடமையைச் செய்கிறது. நாம் நல்லவனா கெட்டவனா என்று பார்த்தா நமக்குள் ஸ்வாசமாகிப் போகிறது? அதற்கு ஏழை-பணக்காரன், படித்தவன்-மூடன் என்ற பேதமே இல்லை. நாமும் காற்றைப் போலவே அனைவரையும் அரவணைத்துக் கொண்டு அவர்களுக்கு உரிய சேவைகளை தர்மமாகச் செய்ய வேண்டும்.

அடுத்து என் குரு தண்ணீர். அது தன்னோடு சேர்ந்த பொருளைத் தூய்மை செய்வது போல நம்முடன் சேர்பவர்களின் மனதை முடிந்த வரையில் நல்ல எண்ணங்களில் செலுத்தித் தூய்மை பெறவே நாம் நட்புறவு கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து என் குரு அக்னி, அது தன்னுடன் சேரும் அனைத்தையுமே மாற்றி விடுவது போல நாமும் நம்முடன் சேரும் அனைவரையும் நல்ல பாதையில் மாற்றி வாழ்விக்க முயற்சிக்க வேண்டும்.

அடுத்து நிலா ஒரு குரு. தன்னை தினமும் வளர்த்துக் கொண்டு ஒருநாள் பூர்ண சந்த்ரன் ஆகி எல்லோருக்கும் குளிர்ச்சியும் ஒளியும் தந்து சேவை செய்கிறது. தன்னிடம் இல்லாத ஒளியை சூரியனிடம் இருந்து பெற்று உலகிற்குத் தருகிறது. அறிவு வளர்ச்சி நிலவைப் போல இருக்க வேண்டும். உதவுவதிலும் நம்மால் முடியாவிட்டாலும் உதவி செய்யும் பலம் கொண்டவர்கள் மூலம் பல சேவைகளை நாம் செய்விக்க வேண்டும்.

அடுத்து சூரியன் என் குரு. சிறிதும் சுயநலம் இன்றி ஆர்பாட்டம் இல்லாமல் தலைவனாக இருந்து தன் ஒளியை அனைவருக்கும் வாரி வழங்கி அருள்கிறான். அதைப் போலவே உதவிகள் பல செய்து கர்வம் இல்லாத தலைவனாக நாம் வாழ வேண்டும்.

அடுத்து என் குரு பறவைகள். அவை கூடு கட்டிக் குஞ்சு பொறித்து, அவற்றை மிக மிக விழிப்புணர்வுடன் பாதுகாத்து, ஊட்டி வளர்த்து உரிய பக்குவம் வந்தவுடன் பற்று இன்றி பறக்க விட்டு விட்டு அவையும் தன் அடுத்த வேலையைப் பார்ப்பது போல நாமும் கடமைகளை உரிய காலத்தில் செய்ய வேண்டும்.

மலைப்பாம்பு மிகப்பெரிய குருவாகும். அது தானாக போய்த் தன் இரையைத் தேடாது. தானாகக் கிடைத்த இரையையே உண்ணும்.

அடுத்த குரு கடல். அது எத்தனை பொருள்களை உள்ளே கொட்டினாலும் அளவு அதிகரிப்பதும் இல்லை, சூரியன் சுட்டு எரித்து எத்தனை நீரை ஆவியாக்கினாலும் தன் அளவில் இருந்து குறைவதும் இல்லை. அதுபோல் செல்வமோ வறுமையோ, இன்பமோ துன்பமோ எதுவாயினும் நாம் ஒரே சீரான அமைதியான ஆனந்த மனநிலையில் வாழ வேண்டும் என்று கடல் உபதேசிக்கிறது.

அடுத்த குரு விட்டில் பூச்சி. அது விளக்கு வெளிச்சத்தை உண்மை என்று பாவம் நினைத்துக் கொண்டு அதில் விழுந்து, பிறந்த சில நிமிஷங்களிலேயே இறந்தும் விடுவதைப் போல உலக வாழ்வில் அற்பத்தனமான புலன் இன்பத்தில் ஈடுபட்டு மனோ-உடல் வ்யாதிகளுக்கு ஆளாகி விடுதல் கூடாது.

அடுத்து நல்ல குணமும் அறிவும் அன்பும் கொண்ட பெண்கள் அனைவருமே குரு வடிவானவர்கள். அவர்கள் சமூகத்தில் தாயாய்-சஹோதரியாய்-மனைவியாய்-தோழியாய்-ஆசிரியையாய் இருக்கும் போது, அவர்களின் துணையுடன் அறிவுரையுடன் வாழ்க்கையை மேற்கொள்ளுதல் மிக அவசியம்.

அடுத்து சிலந்தி ஒரு குரு. அது தனக்குத் தேவையான போது வலை பின்னும், தேவை முடிந்ததும் அதைத் தானே தின்று விடும். அது போல் நாமும் selfdependent ஆக முடிந்தவரை வாழ வேண்டும். மேலும் சிலந்தி அயராத உழைப்பாளியும் கூட. எத்தனை முறை அதன் வலையை நாம் அகற்றினாலும் அது மீண்டும் மீண்டும் தளராமல் பிண்ணிக் கொண்டு வாழ்க்கை நடத்தும்.

அடுத்த குரு தேனீக்கள்.உழைப்பு, சேமிப்பு, தளராத மனம் இவற்றைத் தேனீக்கள் கற்றுத் தருகின்றன. குறிப்பாக பல இடங்களுக்கும் அயராமல் சுற்றித் திரிந்து உயர்ந்த பூக்களில் மட்டுமே உள்ள சுவை மிக்க தேனை மட்டும் கொண்டு வந்து அவை தன் கூட்டில் சேர்க்கின்றன. அதைப் போல நாம் உலகில் மிக உயர்ந்த விஷயங்களை மட்டுமே மனதில் சேமித்துக் கொள்ள வேண்டும். மேலும் அவை

தன் ஒரே எஜமானியான ராணித்தேனீக்குக் கட்டுப்படுவது போல, நாமும் நம் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்.

அடுத்த குரு மான். மான் வயிறு நிறைய சாப்பிடும். ஆனால் எங்கே புல்லைப் பார்த்தாலும் உடனே மீண்டும் சாப்பிடும், மற்ற விலங்கிடமோ வேடர் இடமோ மாட்டிக் கொள்ளும். வாயை அடக்காத மான் போல மனிதன் தன் புலன்களை அடக்காமல் போனால் வ்யாதியும் மன உளைச்சலும் வந்து கஷ்டப்பட நேரிடும்.

இப்படி இந்த உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் நமக்கு குரு தான். காரணம் ஒவ்வொரு பொருளிலும் ஜீவனிலும் இறைவன் மெய்யுணர்வாக நிறைந்து ஒரு ஞானத்தை போதிக்கிறான். எனவே எல்லோரையும் எல்லாவற்றையும் அன்புடன் மதிக்க வேண்டும். அப்போது எல்லோரும் மஹாத்மா தானே!?" என்று கூறினார் அந்த மஹான்.

இதைக் கேட்ட அந்த நாஸ்திக இளைஞர்கள் உண்மையான ஞானமே ஆன்மீகம் என்பதையும் உணர்ந்தனர். அடுத்த நாள் அவர்கள் முதலில் வீண்விதண்டாவாதப் பேச்சைக் கைவிட்டு எதையும் ஆழமாக யோசிக்கத் தொடங்கினர்.

ஓம் நமசிவாய!